ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2471/53 - 2026 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2026.01.16

2471/53 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின்மேலும் 2025, யூலை, 14 ஆந் திகதிய 2445/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்:-

(1) அக்கட்டளையின் III ஆம் அட்டவணையில் -

(அ) அவ்வட்டவணையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் விடயங்களை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வட்டவணையின் 10 ஆம் விடயத்தின் இச்சட்டத்தின் “சகல ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்படும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “இச்சட்டத்தின் 2 ஆம், 11 ஆம் மற்றும் 12 ஆம் பிரிவுகளிலிருந்து விலக்களிக்கப்படும்” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அக்கட்டளையின் IV ஆம் அட்டவணையில் அவ்வட்டவணையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் இலக்க விடயங்களை நீக்கிவிடுவதன் மூலமும்.

**அநுர குமார திசாநாயக்க**,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2026, சனவரி 16.

EOG 01 - 0169

1A - PG 7472 — 378 (2026/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.